DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 49/2016 |
| Depostition of witness for | Prosecution wit. PW.5 |
| Name | மல்லிகா |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 07-09-2022

முதல்விசாரணை

1. நான் பத்மநாதபுரத்தில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்து போனது எனது மகன் ஆவார். கடந்த 28.06.2015 ம் தேதி எனது மகன் KTC நகரில் உள்ள சர்ச்சிக்கு செல்வதற்காக இருசக்கரவாகனத்தில் TVS super excel வண்டியில் பின்னால் எனது மருமகளையும், பேரன்களையும் உட்கார வைத்துக்கொண்டு திருச்செந்துார் ரோட்டில் செல்லும் போது செய்துங்கநல்லுார் அருகே உள்ள கருங்குளம் யூனியன் ஆபிஸ் முன்பு மேற்காக போய் கொண்டு இருக்கும் போது எதிரே வந்த நான்கு சக்கர வாகனம் கார் மோதி விபத்து ஏற்பட்டது.

2. விபத்தின் காரணமாக எனது மகன், மருமகன், பேரன்களுக்கும் அடிப்பட்டது. எனது மகனை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அன்றைய தினம் 4.00 மணிக்கு இறந்து போய்விட்டார்.

எதிரி தான் அன்றைய தினம் சம்பவ தேதியில் அந்த காரை ஒட்டி வந்து விபத்து ஏற்படுத்தினார் என்பதை சம்பவ இடத்தில் சென்ற போது நான் தெரிந்து கொண்டேன் சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

3.சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மருத்துவமனைக்கு சென்ற பின்பு தான் விபத்து குறித்து தெரியும் என்றால் சரியல்ல. எனக்கு சம்பவ இடத்தில் இருந்த நபர்கள் தான் எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார்கள்.

4. மருத்துவமனை சென்ற பின்பு தான் மற்ற விபரங்களை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை

DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 49/2016 |
| Depostition of witness for | Prosecution wit. PW.6 |
| Name | பாஸ்கர் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 07-09-2022

<u>முதல்விசாரணை</u>

1. நான் பத்மநாதபுரத்தில் குடியிருந்து செங்கல் சூளையில் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போனது எனது உடன் பிறந்த சகோதரர் ஆவார். கடந்த 28.06.2015 ம் தேதி காலை 10.15 மணிக்கு எனது சகோதரர் KTC நகரில் உள்ள சர்ச்சிக்கு செல்வதற்காக இருசக்கரவாகனத்தில் TVS super excel வண்டியில் பின்னால் எனது அண்ணியையும் , அண்ணன் குழந்தைகளையும் உட்கார வைத்துக்கொண்டு திருச்செந்துார் ரோட்டில் செல்லும் போது செய்துங்கநல்லுார் அருகே உள்ள கருங்குளம் யூனியன் ஆபிஸ் முன்பு மேற்காக போய் கொண்டு இருக்கும் போது கார் மோதி விபத்து ஏற்பட்டது.

2. விபத்தின் காரணமாக எனது அண்ணன் , எனது அண்ணியையும் , அண்ணன் குழந்தைகளையும் அடிப்பட்டது. எனது அண்ணனை

திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று அன்றைய தினம் 4.00 மணிக்கு இறந்து போய்விட்டார். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை.

3.சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மருத்துவமனைக்கு சென்ற பின்பு தான் விபத்து குறித்து தெரியும் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு நான் சென்றேன். எனது மதினி சொல்லி விபத்து குறித்து தெரிந்து கொண்டேன்.

4. சம்பவ இடத்தில் எனது அண்ணன் இருந்த போது நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். பத்மாநாதபுரத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு வர எத்தனை மணி நேரம் ஆகும் என்றால் 1/4 மணிநேரம் ஆகும். நான் தான் ஆம்புலன்ஸில் கொண்டு சென்றேனா என்றால் நான் ஆம்புலன்ஸில் சென்றேன்.

5.நான் பிரேதத்தை பார்த்து ஆம்புலன்ஸில் நானும் சென்றேன் என்ற விபரத்தை போலீசாரிடம் தெரிவித்தேன் என்றால் தெரிவிக்கவில்லை. சம்பவத்தில் இறந்தது எனது அண்ணன் என்பதால் பொய்யாக சாட்சிம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை